திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐயா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னார்கள். தொட்டியம் ஒன்றியத்தில், நத்தம், காடுவெட்டி, அலகரை, மணமேடு, எம்.புத்தூர், நாகைய நல்லூர் ஆகிய கிராமங்களில் கிராமச் சாவடிகள் பழுதடைந்துள்ளன. இவை வருவாய் கிராமங்களில் அதிக மக்கள் தொகை இருக்கிற கிராமங்கள் ஆகவும், அதே நேரத்தில் அந்தந்தப் பகுதியில் முக்கிய வருவாய் கிராமங்களாகவும் இருப்பதால், அந்தக் கிராமச் சாவடிகளை எப்போது புதுப்பிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு ஐயா அவர்கள் அறிவிப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன நத்தம் சாவடிக்கு *75* ஆயிரம் ரூபாய், காடுவெட்டி கிராமச் சாவடிக்கு *75* ஆயிரம் ரூபாய், அலகரை, மணமேடு கிராமச் சாவடிக்களுக்கு *80* ஆயிரம் ரூபாய், எம். புத்தூர் கிராமச் சாவடிக்கு *1* லட்சத்து *26* ஆயிரம் ரூபாய், நாகையநல்லூர் கிராமச் சாவடிக்கு *50* ஆயிரம் ரூபாய் என்று மதிப்பீடு போட்டு, வேலை செய்ய வேண்டும் என்று அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. வி.பி.ஆர். ரமேஷ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

4--

அரசு பொது மருத்துவமனையை நவினமாக்குதல்

38705*--திரு. வி.பி.ஆர். ரமேஷ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையை நவீன மருத்துவ வசதி கொண்ட மருத்துவமனையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தூத்துக்குடி அரசு பொது மருத்துவமனையில் தேவையான நவீன மருத்துவ வசதிகள் இயங்கி வருகின்றன. தேவை ஏற்பட்டால் மேலும் வசதிகள் செய்யப்படும்.

திரு. வி.பி.ஆர். ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி பல தொழிற்சாலைகள் நிறைந்த நகரம். வளர்ந்து வரும் நகரம். போக்குவரத்து அதிகம் உள்ள இடம். அங்கு அடிக்கடி விபத்து நடக்கின்றது. தூத்துக்குடி அரசாங்க மருத்துவமனையில் நவீன வசதி இல்லாததால், பாளையங்கோட்டை, மதுரை போன்ற நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனைகளுக்கு பாதிக்கப்படுபவர்களைக் கொண்டு செல்வதற்குள் அவர்கள் இறந்து விடுகிறார்கள். ஆதலால், தூத்துக்குடியும் மதுரை, பாளையங்கோட்டை போன்ற நவீன வசதிகளை கொண்ட மருத்துவமனையாக எப்போது ஆக்கப்படும்?*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, பாளையங்கோட்டை மருத்துவமனைகள் டீச்சிங் ஆஸ்பிடல்ஸ், ஆதலால், அங்கு கூடுதலாக வசதிகள் ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே, அதற்கு சரிசமமான வாய்ப்புகளை இங்கே ஏற்படுத்துவது என்பது சிரமம் என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னக் கருத்துக்களை மனதில் வைத்து, நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வி.பி.ஆர். ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில முக்கியமான ஸ்கேன் போன்ற அதி நவீன வசதிகள் கொண்ட மருத்துவமனையாக எப்போது ஆக்கித் தரப்படும்?*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.டி. ஸ்கேன் என்பது எல்லா மருத்துவமனைகளிலும் இல்லை. சொல்லப்போனால், இன்னும் அது சென்னை, தஞ்சாவூர் இப்படிப்பட்ட இடங்களிலேதான் இருந்தது. இப்போது சமீபத்திலே, திருநெல்வேலி, பாளையங்கோட்டை மருத்துவமனையிலே புதியதாக ஒரு சி.டி. ஸ்கேன் அமைக்கப்படுகிறது. எனவே, அதற்கு மிக அருகாமையிலேதான் இந்த மருத்துவமனையும் இருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுக்கு அது பயன்படும். ஆனால், மற்ற சிறிய அளவிலே இருக்கிற ஸ்கேன்கள் எல்லா

மருத்துவமனைகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தூத்துக்குடி மருத்துவமனைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, சி.டி. ஸ்கேனைப் பொறுத்தவரை இப்போது பாளையங்கோட்டையிலே வருகிற அந்த மருத்துவமனையிலே இருப்பது அந்தப் பகுதிக்கும், தூத்துக்குடிப் பகுதிக்கும் பயன்படும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தூத்துக்குடிப் பற்றியது மூலக் கேள்வி. திரு. த. ரத்தினவேல்.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்குத் தனிக்கேள்விப் போடுங்கள். உட்காருங்கள். திரு. சூ.சே. இராஜமன்னார்.

திரு. சூ.சே. இராஜமன்னார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டம், நெல்லை மாவட்டத்திலிருந்து தனியாகப் பிரிவதற்கு முன்பு, நெல்லை மாவட்டம் ஒரே மாவட்டமாக இயங்கியபோது, அமைச்சர் அவர்கள் சொன்னது போல இப்போது டீச்சிங் ஆஸ்பிடலாக நெல்லையில் செயல்பட்டாலும், தூத்துக்குடிதான் அரசு பெரிய மருத்துவமனையாக அப்போது செயல்பட்டு வந்தது. அப்போது நெல்லையிலிருந்து தூத்துக்குடிக்கு சுகமில்லாதவர்களைக் கொண்டு வரும் சூழ்நிலைதான் இருந்தது. இப்போது, தூத்துக்குடியிலிருந்து நெல்லைக்குக் கொண்டு வரும் ஒரு சூழ்நிலையாக மாற்றியிருக்கிறார்கள். ஆகவே, அப்போதிருந்தவாறு, தூத்துக்குடி மருத்துவமனையையும் முன்பு போலவே பெரிய மருத்துவமனையாக, அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனையாக மாற்றித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மருத்துவமனை ஒரு தாலூகா மருத்துவமனையாகத்தான் இருந்தது. திருநெல்வேலி மாவட்டம் ஒன்றாக இருந்த நேரத்திலே திருநெல்வேலி, பாளையங்கோட்டை மருத்துவமனை கல்லூரி மருத்துவமனையாக இருந்து. அதே நேரத்திலே, தென்காசி மருத்துவமனைதான் அந்த மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனையாக இருந்தது. தூத்துக்குடி தாலூகா மருத்துவமனை எனற நிலையிலிருந்து இப்போது தலைமை மருத்துவமனையாக, அதாவது மாவட்டத் தலைமை மருத்துவமனையாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 496 படுக்கைகள் அங்கே இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால்,

1996 பிப்ரவரி 15]

ஏற்கெனவே இருந்த வசதிகள் அங்கே குறைக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் கூடுதலாக வசதிகளை இந்த அரசு ஏற்படுத்தும். எனவேதான் நான் ஏற்கெனவே தெரிவித்தேன், ஒவ்வொரு மருத்துவமனையிலேயும் சி.டி. ஸ்கேன், போன் வசதிகள் ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம் என்று. அதனால்தான் மதுரை என்றால் மதுரையைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு, திருநெல்வேலி என்றால் திருநெல்வேலியைச் சுற்றி இருக்கிற பகுதிக்கு, கோவை என்றால் கோவையைச் சுற்றியிருக்கிற பகுதிக்கு, இப்படி ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து முக்கியமான கருவிகளை அங்கே வாங்கிக் கொடுத்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும், தூத்துக்குடியைப் பொறுத்தவரை அரசாங்கம் தனிக் கவனம் எடுத்துக்கொண்டு தேவையான மாவட்டத் தலைநகரத்திற்குத் தேவையான வசதிகள் இருந்தாலும்கூட, கூடுதலாக என்ன வசதி தேவை என்பதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5--

அரசு மூலிகைத் தோட்டம்

**70715--*திரு. இரா. தாமரைக்கனி:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவில்லிபுத்தூர் தொகுதி, செம்பகத்தோப்பு அருகே உள்ள ஸ்ரீஆண்டாள் கோயில் நிலத்தில் உள்ள அரசு மூலிகைத் தோட்டம் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஏனென்றால் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகளான நீண்ட காலக் குத்தகை அனுமதி கிணறு மற்றும் முள்வேலி அமைக்கத் தேவையான அனுமதியை தேவஸ்தானம் தரவில்லை. மேலும் பொருளாதாரம் மற்றும் தொழில் நுட்ப ரீதியாகத் திட்டம் வெற்றிகரமாக அமையாது என்று ஆய்வு தெரிவிக்கிறது.